# In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

O.S.No.. 110/2021 தேதி- 18.06.2026

(P.W.1) . உஷா குமாரி

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வழக்கு பட்டிகை சொத்தில் இருக்கும் வீட்டின் கதவு எண் என்ன என்றால் 14/96 ஆகும். நான் தாக்கல் செய்திருக்கும் வா.சா.ஆ. 9 முதல் வா.சா.ஆ 13 வரை உள்ள ஆவணங்களில் நான் மேற்கூறிய கதவு எண் கிடையாது என்றால் சரிதான். நான் இந்த வழக்கை 2021 ஆம் ஆண்டு தாக்கல் செய்தேன். நான் தாக்கல் செய்திருக்கும் வா.சா.ஆ. 9 முதல் வா.சா.ஆ 13 வரை உள்ள ஆவணங்கள் 13.05.2025 முதல் 11.10.2025 வரை உள்ள தேதிகளில் உள்ள ஆவணங்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்திருக்கும் மேற்படி ஆவணத்திற்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.